இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு

# பெறுகை அறிவித்தல்

## Web Application Firewall (WAF) ஒன்றை வழங்குதல், நிறுவுதல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் பராமரித்தல்

## PR/02/12-47

Web Application Firewall (WAF) ஒன்றை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் கீழ் செயற்படும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் திணைக்கள பெறுகைக் குழு (DPC) தலைவரினால் அழைக்கப்படுகின்றன.

விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையை பின்பற்றி நடத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணங்களில் வழங்கப்பட்டுள்ள தகைமைத் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்யும் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் பெறுகை வழிகாட்டிகளில் வரையறுக்கப்பட்டவாறு அனைத்து தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்கள் இதில் பங்குபற்றலாம்.

விலைமனுக்கோரல் ஆவணங்களை மேற்கூறிய முகவரியில் 2026-07-17ஆம் திகதி முதல் 2026-08-07ஆம் திகதி வரையான வேலை நாட்களில் வேலை நேரங்களில் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பத்தரமுல்ல, கொஸ்வத்த, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 234ஆம் இலக்கத்திலுள்ள 2ஆம் மாடியின் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக பெறுகைக்கான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி 011-2880550. மின்னஞ்சல்: mgr_procurement@slbfe.lk

2026-07-17ஆம் திகதி முதல் 2026-08-07ஆம் திகதி வரையும் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 ரூபாவை காசாளரிடம் செலுத்திய பின்னர், விலைமனுவை சமர்ப்பிக்கும் நிறுவனத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட வியாபார பதிவு சான்றிதழின் சான்றுபடுத்திய புகைப்படப் பிரதியொன்றுடன் விலைமனுவை சமர்ப்பிக்கும் நிறுவனத்தினால் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக பெறுகைப் பிரிவிலிருந்து விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனு திறக்கப்படும் நாள் முதல் 105 நாள் வரையில் (2026-08-10 - 2026-11-25) செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் 130,000.00 ரூபா பெறுமதியானதுமான விலைக்கோரல் பிணை முறியொன்றை விலைமனுதாரர் விலைமனுக்களுடன் இணைக்க வேண்டும்.

சித்திகரமான விலைமனுதாரர் / விலைமனுதாரர்கள் மொத்த விலைமனுப் பெறுமதியின் 10% இற்கு நிகரான செயற்பாட்டு உத்தரவாதமொன்றை கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள் முதல் 14 நாட்களுக்குள் வழங்க வேண்டும். அது கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள் முதல் 393 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும். கேள்வி கையளிக்கப்பட்டதன் பின் சேவையை நீங்கள் வழங்கத் தவறினால், செயற்பாட்டு உத்தரவாதம் எவ்வித முன்னறிவிப்புமின்றி இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் முழுமையாக நிராகரிக்கப்படும்.

விலைமனுப்பிணை முறி மற்றும் செயற்பாட்டு உத்தரவாதம் ஆகிய இரண்டும் நிபந்தனையற்ற மற்றும் கோரிக்கை உத்தரவாதமாகவிருக்க வேண்டும். அது இலங்கையில் செயற்படும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்ட ஏற்றுக்கொள்ளக்கூடிய உத்தரவாதமாகவும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக தலைவருக்கு செலுத்தக்கூடியதாக இருக்க வேண்டும்.

விலைமனுக்கோரல் ஆவணங்களைத் தாங்கி வரும் முத்திரையிடப்பட்ட தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் “Web Application Firewall (WAF) ஒன்றை வழங்குதல், நிறுவுதல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் பராமரித்தல் - PR/02/12/47” என குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கள் 2026.0810ம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன்னராக கிடைக்கும் வகையில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக 2ஆம் மாடியின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள 01ஆம் இலக்கப் கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமாக சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பெற்றுக் கொண்ட அனைத்து விலைமனுக்களும் கேள்வியை மூடிய பின்னர் அதே முகவரியில் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதியானவர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் எந்தவொரு விலைமனுவையும் நிராகரிப்பதற்கான உரிமையை திணைக்கள பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் எந்தவொரு விலைமனு ஆவணத்தின் தயாரித்தல் அல்லது சமர்ப்பித்தலில் நேரடியாக அல்லது மறைமுகமாக ஏற்படும் எந்தவொரு செலவினத்திற்கும் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

**தலைவர்,**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்,**
**இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**கொஸ்வத்த, பத்தரமுல்ல.**
**தொலைபேசி/தொலைநகல்: 011-2880550/ 2880564 /2887585**
**மின்னஞ்சல்: mgr_procurement@slbfe.lk**

“உலகளாவிய வலுப்படுத்தலுக்கு உள்நாட்டு ஒத்துழைப்பு”